Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 94/2020 PW-1**

Name : எழில் (எ) எழிலரசன்
Father / Husband name : வடிவேல்
Village : திண்டிவனம்
Age : 43
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 05.01.2026

A1 present. A2, A3 absent. Petition u/s 355 BNSS filed and allowed. APP present.

**முதல் விசாரணை**

நான் தற்போது பெயிண்ட்டிங் வேலை செய்கிறேன். சாட்சி அன்வர் எனது நண்பர். சாட்சிகள் சுரேஷ், ராமதுரை ஆகியோர்களை எனக்கு தெரியும். கடந்த 15.05.2017 அன்று கிடங்கல் 1 லுள்ள எனது நண்பர் வீட்டிற்கு சென்று பேசிவிட்டு அன்று மதியம் சுமார் 12 மணியளவில் நான் மட்டும் ஏரிக்கரை வழியாக நடந்துவந்துகொண்டிருந்தேன். அப்போது 1வது எதிரி மற்று 2 நபர்கள் ஏரிக்கரை மேற்பகுதியில் குடித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது 1வது எதிரி தீப்பெட்டி கேட்டார், அதற்கு நான் இல்லை என்று சொன்னதற்கு 1வது எதிரி கல்லால் எனது மூக்கில் குத்திவிட்டார். உடனிருந்த 2 நபர்கள் தடியால் எனது முதுகு மற்றும் காலில் அடித்துவிட்டார்கள். அதில் நான் மயக்கமாகயிருந்ததால் எனது நண்பர்கள் சுரேஷ் மற்றும் ராமதுரைக்கு போன் மூலம் தகவல் சொல்லி அவர்கள் உதவியுடன் திண்டிவனம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். 1வது எதிரி என்னை தேவிடியா பையா என்று அசிங்கமாகதிட்டி, நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தால் எனது கழுத்தை அறுத்துவிடுவேன் என்று கொலை மிரட்டல்விடுத்தார். முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் 3 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தபோது திண்டிவனம் போலிசார் மருத்துவமனைக்கு வந்து புகார் வாக்குமூலம்

எழுதினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் என்னால் கொடுக்கப்பட்டது தான், அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதனை நான் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் செய்துகொடுத்தேன். மற்ற 2 நபர்களை பார்த்தால் அடையாளம் காட்டுவேன். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள். **சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனக்கு மூக்கில் தண்டுவடம் உடைந்துவிட்டது.

**2, 3 வது எதிரிகள் அடையாளம் காட்டுவதற்காக முதல் விசாரணையின் தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.